# முடிவுரை

# இயல் VIII

## முடிவுரை

7.1. மேற்குறிப்பிட்ட இயல்களில் குழுவானது 1984 ம் ஆண்டிலிருந்து இந்நாள் வரை மக்களாட்சி பன்முகப்படுத்தலின் வரலாற்றையும் (இயல் 2), அணுகுமுறை ஏற்படுத்த குழு மேற்கோள் காட்டியமையும் (இயல் 3) மாநிலத்தில் மேம்படுத்தப்பட வேண்டிய 29 நடவடிக்கைகளைப் பாகுபடுத்தி ஊரக உள்ளாட்சி மன்றங்கள் பகுதிகளுடன், செய்கடமைகளை மூன்று நிலைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும், (இயல் 4), இதுவரை திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக இந்நிறுவனங்களின் இணைப்புகள் சுருக்கமும் (இயல் 5) மற்றும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களின் மக்களாட்சி பன்முகப்படுத்தலைச் செயற்படுத்த கட்டமைப்பு சிறப்புக்கூறு பற்றிய விபரமும் (இயல் 6) குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையானது தமிழ்நாட்டில் மக்களாட்சி பன்முகப்படுத்தலின் செயலாக்கத்திற்கு ஒரு அடித்தளமாக அமையும்.

7.2. உள்ளாட்சி அமைப்புகளுக்கு படிப்படியான அதிகார ஒப்படைப்பிற்கு இக்குழு பரிந்துரை செய்துள்ளது. குழுவானது இயல்–4ல் அதிகாரங்கள், செய்கடமைகள், பொறுப்புகள் மாறுதல் தொடர்பாக ஆலோசனை வழங்கியுள்ளது. இயல் 5–ல் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குத் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் இணைத்தல் குறித்தும், இயல்–6ல் இந்த ஒப்படைப்புகளைச் செயல்முறைப்படுத்தல் தொடர்பானவையும் தெரிவிக்கின்றன.

7.3. மக்களின் தேவையை நிறைவேற்றவும், உள்ளூர் பகுதியை மேம்படுத்தவும் தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு அரசியலமைப்பு மற்றும் சட்ட ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அந்நிறுவன அமைப்புகளான ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வளர்ச்சித்துறைகளின் நிர்வாக மேம்பாட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில சட்டம் மூலம் அதிகார ஒப்படைப்பு வழங்கப்பட்டிருப்பது பொதுமக்களிடமும் குறிப்பாக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமும் ஒரு புதிய எதிர்பார்ப்பினை உருவாக்கியுள்ளது. பஞ்சாயத்து ஆட்சி அமைப்புமுறை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ அந்நோக்கங்களைத் திறம்பட செயல்படுத்துவது, இயற்கை வளங்களைச் சிறப்பாக பயன்படுத்துவது, மக்களாட்சி முறையில் அவற்றின் ஈடுபாடு ஆகியவற்றைக் கொண்டே பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் தீர்மானிக்கப்படும். அதிகார ஒப்படைப்பின் வலிமையும், பொறுப்புகளும், நிதி ஆதாரங்களும் மெதுவாகவே நடைபெறும் என்ற உணர்வு மக்களிடையே உள்ளது. மாநில அரசு தன்னிடமுள்ள பொறுப்புகளையும் தேவையான நிதி ஆதாரங்களையும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்கு முன் வருவதன் மூலம் இக்கருத்தினை மாற்றி கொள்ளவும்.

7.4. இக்குழுவின் அறிக்கை உள்ளாட்சி அமைப்புகளில் பெருமளவு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும். ஏராளமான நிரந்தர ஏற்பாடுகள், வழிமுறைகள், மனப்பான்மை, அதிகாரிகள் ஆகியோர் ஒரு புதிய நிறுவனத்தினை உருவாக்க வேண்டி உள்ளது. ஏனெனில் அந்நிறுவனங்கள் மக்களாட்சி முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களிடமிருந்து அதிகாரங்களை நேரிடையாகப் பெற்றுள்ளது. அப்படியிருக்க தற்போதுள்ள ஏற்பாடுகள் அதிகாரிகளின் கட்டுபாட்டில் இயங்கி வருகின்றது. இச்சூழலில் மேற்கூறிய இரு அமைப்புகளும் ஒன்று பட்டு செயல்படுவது மிகவும் கடினமான ஒன்றாகும்.

7.5. இவ்வாறாக ஏற்கனவே கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகார மாற்றங்களும், செயல்பாடுகளும் நிறைவேற்றப்படும்போது அன்றாடம் பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. கடந்த ஐம்பதாண்டுகளில் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்த கொள்கைகளின் அடிப்படையில் இப்பிரச்சனைகளை கண்ணுற்றால் அவற்றைத் தீர்ப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன.

7.6. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு முறைகளை விரைவுபடுத்த இக்குழுவின் அறிக்கை வழிவகை செய்கிறது. இக்குழுவின் முதல் அறிக்கையின் சில பரிந்துரைகளை ஏற்கனவே மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நிதி ஆதார ஒப்படைப்பு சம்பந்தமான பரிந்துறைகளை மாநில நிதிக்குழுவும் வழங்கியுள்ளது. அவற்றின் சில முக்கிய பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதிகார ஒப்படைப்பிற்கு அரசு எடுக்கும் விரைவான முடிவானது பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளைப் பலப்படுத்தி அவற்றிற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும். மாநில அரசு இது சம்பந்தமாக முக்கியமான வரவேற்கத் தக்க வழிமுறைகளை ஆரம்பித்துள்ளது. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி தலைவர்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநில அளவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் அமைச்சர் பெருமக்களும், உயர் அரசு அதிகாரிகளும் விவாதங்களில் கலந்து கொண்டனர்.

**"உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளின் மீதான முடிவுகளை அவ்வமைப்புகளே எடுக்கும் அம்முடிவுகளை செயல்படுத்தும் பொறுப்பு மட்டுமே அலுவலர்களிடம் இருக்கும் என்பதனை நான் திட்டவட்டமாக கூறிக் கொள்கிறேன்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1997-1998 ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை உரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் முறையான பங்கு பற்றி பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.**

மேற்கூறிய அரசின் தொடர் நடவடிக்கைகள் மக்களாட்சி அதிகார பன்முகப்படுத்தலின் வெற்றிக்கு ஆதாரங்களாகும். தமிழ்நாட்டில் மக்களாட்சி அதிகார பரவலாக்கும் பயணத்தில் உறுதியான செயல்முறை அடிப்படைக்கு இக்குழுவின் அறிக்கை உதவிகரமாக அமையும் என இக்குழு நம்புகிறது.